**சார்புநீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை: திரு.**M. மணிகண்டன், M.A., M.L., PG.D.C.F.Sc.,**

சார்பு நீதிபதி பொள்ளாச்சி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 04 ம் நாள்)

**அசல் வழக்கு எண்: 19/2025**

TNCB11-000114-2025

கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தாலூக்கா, நெ.10, முத்தூர் அஞ்சல், சங்கராயபுரம் கிராமம், கதவு எண்.10/10-ல் வசித்து வரும் சின்னச்சாமி கவுண்டர் மகன் சுமார் 62 வயதுள்ள ராசு. ...வாதி

**/எதிராக/**

1. கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தாலூக்கா, நெ.10, முத்தூர் அஞ்சல், சங்கராயபுரம் கிராமம், யோசனைக்காரர் தோட்டத்துச் சாளையில் வசித்து வரும் லேட்.செல்வகுமாரசாமி மகன் சுமார் 39 வயதுள்ள சதீஸ்குமார்.

2. கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தாலூக்கா, நெ.10, முத்தூர் அஞ்சல், சங்கராயபுரம் கிராமம், யோசனைக்காரர் தோட்டத்துச் சாளையில் வசித்து வரும் லேட்.செல்வகுமாரசாமி மகன் சுமார் 37 வயதுள்ள பாலகிருஷ்ணன்.

3. கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தாலூக்கா, நெ.10, முத்தூர் அஞ்சல், சங்கராயபுரம் கிராமம், யோசனைக்காரர் தோட்டத்துச் சாளையில் வசித்து வரும் லேட்.செல்வகுமாரசாமி மனைவி சுமார் 67 வயதுள்ள காளியம்மாள்.

4. கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோபாலபுரம் சுங்கம், மண்ணூர் அஞ்சல், முத்து நகரில் வசித்து வரும் சிவகுரு மனைவி சுமார் 49 வயதுள்ள ஈஸ்வரி.

5. கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோபாலபுரம் சுங்கம், மண்ணூர் அஞ்சல், முத்து நகரில் வசித்து வரும் சிவசாமி மனைவி சுமார் 43 வயதுள்ள தீபா.

...பிரதிவாதிகள்

தாவாச் சொத்தினை மூன்றில் ஒரு பங்கு (1/3) வாதிக்கு பாத்தியப்பட்டது என முதல்நிலை தீர்ப்பாணை வழங்கியும், மேற்படி தாவா சொத்தை நலந்திகடு கலந்து 3 சமபாகங்களாகப் பிரித்து அதில் வாதிக்கு ஒரு பாகம் ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கி உத்தரவிடக்கோரியும், தாவா செலவுத் தொகை கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் 04.11.2024

தாவாவிற்கான வியாஜ்ஜிய மூலம் கடந்த 19.03.2017, 05.05.1994 21.06.1994 மற்றும் 23.02.2021 ஆகிய தேதிகளில் கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சங்கராயபுரம் கிராமத்தில் ஆரம்பம்.

தாவா மொத்த மதிப்பு ரூ.9,30,860/- இதற்கு கோர்ட்டு பீஸ் ஆக்ட் பிரிவு 37(2)-ன்படி நீதிமன்றக்கட்டணம் ரூ.5,000.00 கட்டப்பட்டுள்ளது.

**<u>தாவா மதிப்பு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| தாவா சொத்து மொத்த மதிப்பு | ரூ.27,92,580/- | |
| வாதியின் 1/3 பங்கு பாத்தியத்தின் நீதிமன்ற மதிப்பு | ரூ.9,30,860/- | |
| நீதிமன்ற கட்டணம் 37(2)ன் படி | | ரூ.5,000/- |

இவ்வழக்கில் வாதிக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி, பி.எஸ்சி., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை இந்நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாத

காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், இறுதியாக 16.04.2026 ம் தேதி என் முன்பாக வரப்பட்டு வாதி தரப்பு வாதம் என்னால் கேட்கப்பட்டு இன்று வரை பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## முதல்நிலை தீர்ப்பாணை

1. தாவா சொத்தினை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் வாதிக்கு ஒரு பாகத்தை ஒதுக்கி வழங்கக் கோரிய பரிகாரம் கிடைக்கத்ததக்கது என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. இவ்வழக்கு செலவு தொகையாக ரூ.16,749/-ஐ வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

## செலவுத்தொகை பட்டியல்

(வாதி தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

| விபரம் | வாதி | பிரதிவாதிகள் |
|---|---|---|
| வழக்குரை கட்டணம் | ரூ. 5,000.00 | - |
| வக்காலத்து | ரூ. 10.00 | - |
| முதுநிலை வழக்குரைஞர் கட்டணம் | ரூ. 8,729.00 | - |
| இளநிலை வழக்குரைஞர் கட்டணம் | ரூ. 2,910.00 | - |
| தட்டச்சர் செலவு | ரூ. 100.00 | - |
| மொத்தம் | ரூ.16,749.00 | - |

## சொத்து விபரம்

கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு சப்ரிடிடு, கிணத்துக்கடவு தாலூக்கா, சங்கராயபுரம் கிராமம், பட்டா நெ.78, க.ச.நெ.97/1 நெ.காலை பு.ஹெக்டேர் 3.04.00 க்கு பு.ஏ.7.50 க்கு தீர்வை ரூ.6.08. இதில் மேல்புறம் தென்வடலாய் பு.ஹெக்டேர் 1.48.18 க்கு

பு.ஏ.3.66. இந்த விஸ்தீரணமுள்ள பூமிக்கு எல்லைகள்,

| | | |
|---|---|---|
| 96 நெ.காலைக்கும் | - | கிழக்கு |
| 97/1 நெ.காலையில் செல்லக்குமாரசாமி பூமிக்கும் | - | மேற்கு |
| 93 நெ.காலைக்கும் | - | தெற்கு |
| 97/2 நெ.காலைக்கும் | - | வடக்கு |

மேற்படி பூமியில் தென்கோடடில் மேல்புறம் உள்ள துரஸ்து கிணற்றில், கிணறு, பொது இடம், மாமூல் வாரி வாய்க்கால்களிலும் மற்றும் மேற்படி கிணற்றில் வைக்கப்பட்டுள்ள 5 HP மின் மோட்டாரிலும் அதில் பொருத்தப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.173-ன் பாத்தியத்திலும் பொதுவில் சரிபாதி பாத்தியம் சகிதம்.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையும் வைக்கப்பட்டது.

Sd./M.மணிகண்டன்
சார்புநீதிபதி, பொள்ளாச்சி.

**முதல்நிலை தீர்ப்பாணை**

அவ எண்.19/2025

17.04.2026